# மரியாள்
# இறைவன் வரைந்த வானவில்



அ.அல்போன்ஸ்
திருச்சி

அன்பின் மடல்

# மரியாள்
# இறைவன் வரைந்த வானவில்

அ.அல்போன்ஸ்-திருச்சி

இறைவனின் இதயத்தில்
புதிய அத்தியாயம் திறந்த நாள்.
பறவைகள்அன்று வழக்கத்தைவிட
இனிமையாகப் பாடின;
மரங்கள் வழக்கத்தைவிட
பசுமையாக நின்றன;
ஏனெனில் பூமியின் மடியில்
விண்ணகத்தின் தேர்ந்தெடுத்த மகள்
பிறந்தாள்;
அவளோடு சேர்ந்து நம்பிக்கையும் பிறந்தது.
அவள் பெயர் மரியாள்.

உலகம் உருவாகும் முன்னரே
உன் பெயர் விண்ணகத்தின் இசையாக
இருந்தது;
ஏவாள் இழந்த தோட்டத்தின் வாசலை
மீண்டும் திறக்க வரையப்பட்ட
புதிய மலராக நீ மலர்ந்தாய்.

யோவாக்கீமும் அன்னாளும் காத்திருந்த
கண்ணீரின் விதையில் பிறந்த
இறைவனின் அமைதியான பதிலே நீ!
பூமி உன்னைப் பெற்ற நாள்
விண்மீன்கள் கூடப் புதிய மொழி கற்றன.
ஏவாள் இழந்ததை
மரியாள் மீட்டெடுக்கப் பிறந்தாள்;
ஒருத்தி கதவை மூடினாள்,
மற்றொருத்தி
அதே கதவைத் திறக்கப் பிறந்தாள்.
உன் சிரிப்பில்
மீட்பின் மொட்டு தெரிந்தது;

உன் கண்களில்
இறைவனின் வாக்குறுதி ஒளிந்தது.
நீ பிறந்தது ஒரு வீட்டின் மகளாக அல்ல;
மனிதகுலத்தின் புதிய தாயாக.
இன்று வானம் பூமிக்கு
ஒரு பரிசு அனுப்பியது.
பொன்னல்ல, வைரமல்ல,
அரண்மனையல்ல;
ஒரு குழந்தை.

அந்தக் குழந்தையின்
சிறு விரல்கள் ஒருநாள்
படைப்பாளியைத் தழுவப் போகின்றன.
அந்தச் சிறு குழந்தை ஒருநாள்
உலகத்தின் இரட்சகரைச் சுமக்கப் போகிறது.
அந்தச் சிறு கண்கள் ஒருநாள்
சிலுவையின் இருளையும்
உயிர்த்தெழுதலின் ஒளியையும்
ஒரே வாழ்வில் காணப்போகின்றன.
அவள் சூரியன் அல்ல;
சூரியனை அறிவிக்கும்
விடியற்கால நட்சத்திரம்.
அவள் ஒளி அல்ல;
ஒளியை உலகிற்கு
அறிமுகப்படுத்தும்
அமைதியான விளக்கு.

அவள் மீட்பர் அல்ல;
மீட்பரைத் தாங்கும்
அருளின் பேழை.
அதனால் மரியாளின் பிறப்பு
ஒரு குழந்தையின் பிறப்பு அல்ல;
விடியலின் பிறப்பு.
மௌனத்தின் மொழியில்
மகா காவியம் படைத்தவள் நீ!
'ஆம்' என்ற ஒற்றைச் சொல்லால்
அகிலத்தின் மீட்புக்கு
வழிகோலிய தியாகத் தீபம்!

வார்த்தை மனிதனானபோது
வயிற்றில் சுமந்தாய்,
வார்த்தையற்ற துயரங்களை
நெஞ்சில் புதைத்தாய்!

மழை மேகம் அழுதபோது
சூரியன் தந்த ஆறுதல் பரிசு!
வானவில் மனுக்குலம்
தவித்தபொழுது கடவுள் தந்த
அன்பின் பரிசு மரியாள்

நீ! ஒரு வானவில்;
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே
விரிந்த உடன்படிக்கை.
ஏழு நிறங்களில் அருளைப் பூசி,
மனித இதயங்களில் நம்பிக்கையை
வரைந்தவள்.

வானவில் மழையையும் சூரியனையும்
இணைப்பதுபோல்,
மரியாள் மகிழ்ச்சியையும் துயரத்தையும்
அருளில் இணைத்தாள்.
ஏழு நிறங்களின் சங்கமம்,
எல்லைகள் இல்லா அதிசயம்!
மாதாவே...
உன் வாழ்க்கையும் இப்படித்தான்
ஏழு மகிழ்ச்சிகளை முத்துக்களாய்
அணிந்தவள்;
ஏழு துயரங்களைச் சிலுவையாய் சுமந்தவள்.
புன்னகையிலும் இறைவனைப் பாடினாள்;
கண்ணீரிலும் இறைவனை நம்பினாள்.
வானவில்லின் நிறங்கள் மாறாததுபோல்,
அன்னையின் அன்பும் என்றும் மாறாதது
இறைவன் வரைந்த
மீட்பின் வானவில்லை
நம் தாயை வணங்குவோம்.